### விளாத்திகுளம் அருகே வைப்பாறு கோயிலில்

# 8-ம் நூற்றாண்டு கொற்றவை சிற்பம் கண்டெடுப்பு

● **கோவில்பட்டி**

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் வைப்பாறு கோயிலில் 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கொற்றவை சிற்பம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

வைப்பாறு கிராமத்தில் உள்ள வில்லாயுத மூர்த்தி கோயிலில், பாண்டிய நாடு பண்பாட்டு மைய வரலாற்று ஆர்வலர் குணசேகரன், தொல்லியல் ஆய்வாளர் ஸ்ரீதர், முனைவர் தாமரைக்கண்ணன் உள்ளிட்டோர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, கோயில் வளாகத்தில் பழமையான கொற்றவை சிலை இருப்பதைக் கண்டறிந்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: ஆரம்ப காலங்களில் செங்கற்களால் உருவாக்கப்பட்ட கோயில்கள்தான் அதிகம். 6-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குடவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. 8-ம் நூற்றாண்டு மத்தியில் கற்றளி அமைக்கும் வழக்கம் தொடங்கியது. கற்றளி என்பது கற்களைப் பயன்படுத்தி கோயில் கட்டுவதாகும்.

முதலில் சிவனுக்குத்தான் கற்றளிகள் எழுப்பப்பட்டன. அவற்றில் அம்மனுக்கு தனி சந்நிதி கிடையாது. விநாயகர், முருகன், சப்தகன்னிகை, சண்டிகேஸ்வரருக்கு தனித்தனி சந்நிதிகள் இருந்துள்ளன. இந்தக் கோயில்களில் சிவனுக்குப் பிறகு, கொற்றவை வழிபாட்டுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. தமிழர்களின் தாய் தெய்வ வழிபாட்டில் கொற்றவை வழிபாடும் ஒன்று. வட தமிழகத்தில் செதுக்கப்பட்ட கொற்றவை சிற்பம், 8 கரங்களுடன் இருந்தது. ஆனால், பாண்டிய நாட்டில் செதுக்கப்பட்ட பெரும்பாலான கொற்றவை சிற்பங்கள் 4 கரங்களுடன் காட்சியளித்தன.



↑ **வைப்பாறு வில்லாயுதமூர்த்தி கோயிலில் உள்ள கொற்றவை சிற்பம்.**

தற்போது வைப்பாறு கோயிலில் உள்ள கொற்றவை சிற்பம் 4 கரங்களுடன், புடைப்புச் சிற்பமாக உள்ளது. சுமார் 4 அடி உயரம், 2 அடி அகலத்தில் அழகுற காட்சி தருகிறாள் கொற்றவை.

இந்த சிற்பத்தின் மகுடம், கரண்ட மகுடமாகும். கரண்ட மகுடம் என்பது, உருளையான, கூர்மையான வடிவத்தில் இருக்கும். இரு காதுகளிலும் பத்திர குண்டலம் காணப்படுகிறது. வலது மேல் கரத்தில் பிரயோக சக்கரம் உள்ளது. சிற்பத்தின் இடது மேல் கையில் சங்கு காணப்படுகிறது.

இந்த கொற்றவை சிற்பம் மிகவும் சிதைந்து காணப்படுகிறது. இதன் காலம் 8-ம் நூற்றாண்டாக இருக்கக்கூடும். இதுபோன்ற பழமையான சிற்பம் அரிதாகவே காணப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

EVA

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# கோயம்புத்தூரில் ஜி-20 அறிவியல் பிரிவு மாநாடு

## காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து ஆலோசனை

**கோவை**

ஜி-20 உச்சி மாநாட்டின் அறிவியல் பிரிவு மாநாடு 'எஸ் 20' என்ற தலைப்பில் கோவை ஈஷா யோகா மைய வளாகத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது.

இந்த மாநாடு நிறைவடைந்ததையடுத்து, ஈஷா வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் 'எஸ் 20' பிரிவு துணைத் தலைவர் பேராசிரியர் அசுதோஷ் ஷர்மா, ஜி-20 மாநாடு இணைச் செயலர் நாகராஜ் கக்கனூர் நாயுடு உள்ளிட்டோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட இந்த சர்வதேச மாநாடு நிகழ்ச்சியில், 20 நாடுகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் பங்கேற்றனர்.

உலக அளவில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவுகள், அவற்றை எதிர்கொள்ளவும், தவிர்க்கவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் கரோனா போன்ற பெருந்தொற்று பரவாமல் தடுத்தல், எதிர்கொள்ளுதல் உள்ளிட்டவை குறித்து வல்லுநர்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.



கோவையில் நடைபெற்ற ஜி-20 அறிவியல் மாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய எஸ்-20 பிரிவு துணைத் தலைவர் பேராசிரியர் அசுதோஷ் ஷர்மா, ஜி-20 மாநாடு இணைச் செயலர் நாகராஜ் கக்கனூர் நாயுடு உள்ளிட்டோர். படம்: ஜெ.மனோகரன்

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத சூரியஒளி, காற்றாலை உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் துறைக்கு சர்வதேச அளவில் அதிக முக்கியத்துவம் அளித்து செயல்பட வேண்டுமென இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக, சூரியஒளி ஆற்றல் உற்பத்தித் துறையில், பகலில் உற்பத்தி செய்யப்படும் மின் சாரத்தை சேமித்துவைக்க போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் உடனுக்குடன் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, மின்சேமிப்பு கட்டமைப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

வரும் காலங்களில் மக்களின் அன்றாட வாழ்வின் அனைத்து செயல்களிலும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மிக முக்கியப் பங்கு வகிக்க உள்ளது. இத்தகைய அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் நன்மைகள் கிடைப்பதைப்போல, பல தீமைகளும் ஏற்படும். எனவே, இத்தகைய தொழில்நுட்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, மக்கள் நலன் காக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இதையொட்டி, ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குருவுடன் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி, பங்கேற்பாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. ஆன்மிகம், அறிவியல் இரண்டும் மக்கள் நலனைத்தான் அடிப்படையாகக் கொண்டவை. பூமியை வாழச் சிறந்த இடமாக மாற்ற, அனைவரும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளுக்கு மக்களின் பங்களிப்பு மிக முக்கியம் என்றும் வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

ஜி-20 செயலர் நமன் உபாத்யாய், இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மூத்த இயக்குநர் ஆர்.கே.ஷர்மா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

EVA STALIN

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# சிபிஎஸ்இ பள்ளிகளில் தமிழ்வழி கல்வி

## மாநில மொழிகளில் பாடநூல் தயாரிப்பு

● சென்னை

தேசிய கல்விக் கொள்கையின்படி, சிபிஎஸ்இ பள்ளிகளில் தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் பாடங்களை நடத்த மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (சிபிஎஸ்இ) கீழ் இயங்கும் பள்ளிகளில், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இந்நிலையில், பள்ளிக் கல்வியை உள்ளூர் மொழிகளில் வழங்க வேண்டும். இதற்காக உள்ளூர் மொழிகளில் பாடநூல்களை மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதை செயல்படுத்தும் வகையில் 22 மொழிகளில் பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கான பணிகளில் சிபிஎஸ்இ ஈடுபட்டுள்ளது. மாணவர்களுக்கு பன்மொழி அறிவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிபிஎஸ்இ தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சிபிஎஸ்இ (கல்விப் பிரிவு) இயக்குநர் ஜோசப் இம்மானுவேல், அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய கல்வி அமைச்சகம், இந்திய மொழிகளின் வாயிலாக கல்வி வழங்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வரிசையில் தற்போது மிகவும் முக்கியமான முன்னெடுப்பை கையில் எடுத்துள்ளது.

அதன்படி, 22 இந்திய மொழிகளில் புதிய பாடநூல்களைத் தயாரிக்க தேசிய கல்வியியல் ஆய்வு மற்றும் பயிற்சி மையத்துக்கு (என்சிஇஆர்டி), மத்திய கல்வி அமைச்சகம் அறிவுறுத்தியது. அதற்கான பணியில் என்சிஇஆர்டி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அடுத்த கல்வியாண்டில் இருந்து 22 இந்திய மொழிகளில் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு கிடைக்கும்.

ஏற்கெனவே பொறியியல், மருத்துவம், தொழில் திறன், சட்டம் போன்ற உயர் படிப்புகளுக்கு, மாநில மொழிகளில் பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பயிற்று மொழி அணுகுமுறை, பள்ளிக்கல்வி முதல் உயர்கல்வி வரை ஒரே வடிவில் இருக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, சிபிஎஸ்இ பள்ளிகள், அரசியலமைப்பின் 8-வது அட்டவணையில் உள்ள இந்திய மொழிகளைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம், சிபிஎஸ்இ பள்ளிகளில் தமிழ் வழியில் பாடங்கள் பயிற்றுவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது ட்விட்டர் பக்கத்தில், 'பள்ளிகளில் தாய்மொழி மற்றும் இந்திய மொழிகளில் கல்வியை ஊக்குவிக்கும் முயற்சியானது, பாராட்டுக்குரிய நடவடிக்கையாகும்' என்று தெரிவித்துள்ளார்.

### 70,000 பேருக்கு மத்திய அரசு பணிக்கான நியமன ஆணைகள்

# இந்தியா 3-வது பெரிய பொருளாதார நாடாகும்

## ரோஜ்கர் மேளாவில் பிரதமர் நரேந்திர மோடி உறுதி

**புதுடெல்லி**

உலகின் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மத்திய அரசு துறைகளில் 10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரோஜ்கர் மேளா என்ற வேலைவாய்ப்பு திருவிழாவை பிரதமர் மோடி கடந்த ஆண்டு அக்டோபரில் தொடங்கி வைத்தார். இதன்படி நாடு முழுவதும் இதுவரை 4.33 லட்சம் பேருக்கு மத்திய அரசு துறைகளில் வேலை வழங்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், 7-வது ரோஜ்கர் மேளா நேற்று நடைபெற்றது. இதில் நாடு முழுவதும் 70,000-க்கும் மேற்பட்டோருக்கு பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக மத்திய அரசு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

**கடந்த 9 ஆண்டுகளில்...**

அப்போது அவர் பேசியதாவது: அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற உறுதிபூண்டுள்ளோம். நமது லட்சியத்தை எட்ட அரசு ஊழியர்கள் கடினமாக உழைக்க வேண்டும்.

உலகின் பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் இந்தியா 10-வது இடத்தில் இருந்தது. கடந்த 9 ஆண்டுகளில் இந்தியா அபார வளர்ச்சி அடைந்து, தற்போது 5-வது பெரிய பொருளாதார நாடாக உயர்ந்துள்ளது. விரைவில் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்.

இன்றைய தினம் வங்கித் துறையில் பலர் பணி நியமன ஆணைகளைப் பெற்றுள்ளனர். பொருளாதார வளர்ச்சியில் நமது வங்கித் துறை பெரும் பங்கு வகிக்கிறது. கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு, குறிப்பிட்ட குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள் பல ஆயிரம் கோடி அளவுக்கு வங்கிக் கடனைப் பெற்றனர். அவர்கள் கடனை திருப்பிச் செலுத்தவில்லை. இதனால் வங்கித் துறையின் முதுகெலும்பு உடைந்தது. மத்தியில் பாஜக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு வங்கித் துறையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்தோம். வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தாதவர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இப்போது பொதுத்துறை வங்கிகள் லாபத்தில் இயங்குகின்றன. சர்வதேச அளவில் வங்கித் துறை வலுவாக இருக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்து இருக்கிறது.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்களால் கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் 13.5 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர். இந்த வெற்றி ஒட்டுமொத்த அரசு ஊழியர்களையே சேரும். ஒட்டுமொத்த உலகமும் இந்தியாவின் திறமையை வியந்து பார்க்கிறது.

உலகின் பல்வேறு நாடுகளில் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இந்தியாவில் மட்டும் இளம் தலைமுறையினரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

EVA STALIN IAS

### இந்தியாவில் 2030-ம் ஆண்டுக்குள்

# மரபு சாரா எரிசக்தி திறனை 50 சதவீதமாக உயர்த்த திட்டம்

### ஜி20 எரிசக்தி கூட்டத்தில் பிரதமர் மோடி தகவல்

**புதுடெல்லி**

ஜி20 நாடுகளின் எரிசக்தி துறை அமைச்சர்கள் கூட்டம் கோவாவில் நேற்று நடந்தது. இதில் ஜி20 நாடுகளின் எரிசக்தி துறை அமைச்சர்கள், சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்ற 9 நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள், சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த 14 அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கு மத்திய மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் ஆர்.கே. சிங் தலைமைவகித்தார். இதில்வீடியோ மூலம் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

எரிசக்தி இன்றி, எதிர்காலம், நிலைத்தன்மை, வளர்ச்சி பற்றிய பேச்சு நிறைவடையாது.

சூரிய மற்றும் காற்று மின்சாரம் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடுகளில் ஒன்றாக உள்ளது. அதே போல, பருவநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா வலுவாக செயல்படுத்தி வருகிறது. மரபு சாரா மின்சக்தி திறன் இலக்கை 9 ஆண்டுகளுக்கு முன்பாக அடைந்துவிட்டோம். தற்போது 2030-ம் ஆண்டுக்குள், மரபு சாரா எரிசக்தி திறனை 50 சதவீதமாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நிலையான, மலிவான, சுத்தமான எரிசக்திக்கான மாற்றத்தில் ஜி20 நாடுகள் மேம்பட வேண்டும் என உலக நாடுகள் எதிர்பார்க்கின்றன. வளரும் நாடுகள் குறைந்த செலவில் இத்தகைய மாற்றத்தை அடைவதை நாம் உறுதி செய்ய வேண்டும். இதற்கான தொழில்நுட்ப இடைவெளியை நீக்குவதற்கான வழிகளை நாம் கண்டறிந்து, எரிசக்தி பாதுகாப்பை நாம் மேம்படுத்த வேண்டும்.

இந்தியாவில் கடந்த 9 ஆண்டுகளில் 11 கோடியே 90 லட்சம் குடும்பங்கள் சமையல் காஸ் இணைப்பை பெற்றுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் மின் இணைப்பு இருக்க வேண்டும் என்ற மிகப் பெரிய இலக்கையும் நாங்கள் அடைந்துள்ளோம். எல்இடி விளக்குகள் பயன்படுத்துவதை ஒரு சிறிய இயக்கமாக கடந்த 2015-ம் ஆண்டில் நாங்கள் தொடங்கினோம்.

இது தற்போது உலகின் மிகப் பெரிய எல்இடி விளக்கு விநியோக திட்டமாக மாறியுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு 4,500 கோடி யூனிட்டுக்கும் மேற்பட்ட மின்சாரம் சேமிக்கப்படுகிறது.

மேலும், 2025-ம் ஆண்டுக்குள், 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் இந்தியா முழுவதும் கிடைக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். பசுமை ஹைட்ரஜன் மூலம் கார்பன் வெளியேற்றம் அற்ற நாடாக மாற, இந்தியா திட்டமிட்ட இலக்குடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

### குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறை சார்பில்

# சர்வதேச வர்த்தக நிதி சேவை தளம்

**சென்னை**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் சர்வதேச வர்த்தக நிதி சேவைகள் தளம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் '·'·பேம்டிஎன்' மற்றும் 'ரிசிவபிள்ஸ் எக்ஸ்சேன்ஜ் ஆ·'·ப் இந்தியா' (ஆர்எக்ஸ்ஐஎல்) நிறுவனம் இயங்குகிறது. இதன் துணை நிறுவனமான 'ஆர்எக்ஸ் ஐஎல் குளோபல் ஐஎ·'·ப்எஸ்சி' உடன் இணைந்து தமிழகத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு தேவையான நிதி தீர்வுகளை வழங்குவதற்காக 'சர்வதேச வர்த்தக நிதி சேவைகள் ஐஎ·'·ப்எஸ்சி' தளம் தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்ச்சியில், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் சிஜி தாமஸ் வைத்யன் மற்றும் ஆர்எக்ஸ் ஐஎல் குளோபல் நிறுவனத்தின் இயக்குநர் கேதன் கெய்க்வாட் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த தளத்தில் நிதி பரிவர்த்தனைகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளுக்கான, பல்வேறு நிதி வசதிகளை இதன் வாயிலாகப் பெற முடியும். வர்த்தக வரவுகளை ரொக்க நிதியாக மாற்றுவதற்கும், குறுகிய கால நிதியைப் பெறுவதற்கும் இந்த சர்வதேச நிதி சேவை தளம் உதவியாக இருக்கும் என்று தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜி-20 மாநாட்டுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

# சென்னை, மாமல்லபுரத்தில் ட்ரோன் பறக்க 4 நாட்கள் தடை

**சென்னை/மாமல்லபுரம்**

ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் கூட்டம் நடைபெற உள்ள நிலையில், தமிழ்நாடு பாதுகாப்பு பிரிவு கண்காணிப்பாளர் மாமல்லபுரத்தில் ஆய்வு செய்தார். சென்னை மற்றும் மாமல்லபுரத்தில் 4 நாட்கள் ட்ரோன் பறக்க போலீஸார் தடை விதித்துள்ளனர்.

பெங்களூரு, ஜோத்பூர், லக்னோ, ஐதராபாத், விசாகப்பட்டினம், உதய்பூர், கஜுரஹோ, காந்திநகர், சண்டிகர், புவனேஸ்வர், கொச்சி, வாரணாசி, கோவா, சிலிகுரி, சென்னை, கொல்கத்தா, மும்பை, புதுடெல்லி, திருவனந்தபுரம் போன்ற நகரங்களில் பல்வேறு துறைகளின் சார்பாக பல்வேறு தலைப்புகளில் ஜி-20 மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி, இங்கிலாந்து, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, தென் கொரியா, வடகொரியா, அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, நார்வே, டென்மார்க் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 300 பேர் பங்கேற்கின்றனர்.

**பல்லவர் சிற்பங்கள்**

அந்த வகையில், சென்னையில் பேரிடர் மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து 300 பேர் பங்கேற்கும் ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு ஜூலை 24 (நாளை) முதல் 28-ம் தேதிவரை நடைபெற உள்ளது. சென்னை, கிண்டியில் உள்ள ஓட்டல் ஐடிசி கிராண்ட் சோழா மற்றும் மாமல்லபுரத்தில் உள்ள ஷெரட்டன் கிராண்ட் ஆகிய ஓட்டல்களில் பிரதிநிதிகள் தங்கி மாநாட்டில் பங்கேற்கின்றனர். வெளிநாட்டுப் பிரதிநிதிகள், 2 குழுக்களாக ஜூலை 26 மற்றும் 28-ம் தேதி மாமல்லபுரத்தில் உள்ள பல்லவ சிற்பங்களான சுற்றிப் பார்க்க உள்ளனர்.

**தொல்லை தரக்கூடாது**

இந்நிலையில், மாமல்லபுரம் வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு பாதுகாப்புப் பிரிவு கண்காணிப்பாளர் ராஜேந்திரன், மாமல்லபுரம் கடற்கரை கோயில் நுழைவு பகுதியில் ஆய்வு செய்தார். அப்போது, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வரும்போது புராதன சின்னங்கள் பகுதியில் பாதுகாப்பை அதிகரிக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு எந்த தொல்லையும் கொடுக்காமல் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும் போலீஸாருக்கு அறிவுறுத்தினார்.

மாமல்லபுரம் வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளைப் பாதுகாப்பாக அழைத்து வருவது தொடர்பாக தமிழ்நாடு பாதுகாப்புப் பிரிவு கண்காணிப்பாளர் ராஜேந்திரன் உள்ளூர் போலீஸாருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

**சிவப்பு மண்டலம்**

இந்நிலையில், 23-ம் தேதி (இன்று) முதல் 26-ம் தேதிவரை சென்னை மாநகர காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட, ஜி-20 பிரதிநிதிகள் தங்கும் இடங்கள், விழா நடைபெறும் இடங்கள், அவர்கள் பயணம் செய்யும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டு, அந்த பகுதிகளில் மற்றும் வழித்தடத்தில் ட்ரோன்கள் (ஆளில்லா விமானம்) பறக்கவிடத் தடை விதித்து, சென்னை மாநகர காவல் துறை உத்தரவிட்டுள்ளது.

---

**சென்னையில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான**

# இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம் ஆக.7-ல் தொடக்கம்

**மாநகராட்சி மேயர் பிரியா அறிவிப்பு**

**சென்னை**

சென்னையில் மீண்டும் குழந்தைகளுக்கான இந்திர தனுஷ் 5.0 தடுப்பூசி முகாம்கள் ஆக.7-ம் தேதி தொடங்குவதாக மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தீவிர மிஷன் இந்திர தனுஷ் 5.0 தடுப்பூசி முகாம் நடைபெற இருப்பது தொடர்பான மாவட்ட பணிக்குழுக் கூட்டம் மேயர் ஆர். பிரியா தலைமையில் ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்திர தனுஷ் 5.0 தடுப்பூசி செயல்பாட்டு வழிமுறை கையேட்டை மேயர் பிரியா வெளியிட்டார். பின்னர் அவர் பேசியதாவது:

இந்தியாவில் முதல்முறையாக 2014-ம் ஆண்டு இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம் தொடங்கப்பட்டது. சென்னை மாநகராட்சியில் முதல் இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம் 2015-ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. இதுவரை மொத்தம் 8 முறை முகாம்கள் நடைபெற்றுள்ளன.

இந்தத் தடுப்பூசியை செலுத்துவதன் மூலம் காசநோய், போலியோ, மஞ்சள் காமாலை, தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி, நிமோனியா காய்ச்சல், தட்டம்மை மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் ஆகிய நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்க முடியும்.

அடுத்த கட்டமாக மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் ஆகியவற்றில் மீண்டும் தடுப்பூசி முகாம்கள் நடைபெற உள்ளன. அதன்படி, முதல் கட்டமாக ஆக.7 முதல் 12-ம் தேதி வரை, 2-ம் கட்டமாக செப்.11 முதல் 16-ம் தேதி வரை, 3-ம் கட்டமாக அக்.9 முதல் 14-ம் தேதி வரை நடைபெற முகாம் உள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். அனைத்து 2 வயதுக்கு உட்பட்ட விடுபட்ட குழந்தைகள், 2 முதல் 5 வயதுள்ள விடுபட்ட குழந்தைகள், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி முகாம் நாட்களில் தடுப்பூசி மருந்து கொடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையர், ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மாநகர நல அலுவலர் எம்.ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் எஸ். பானுமதி, இணை இயக்குநர் (நோய் தடுப்பு) வினய், கண்காணிப்பு மருத்துவ அலுவலர் (உலக சுகாதார அமைப்பு) கே.சுரேந்திரன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் திட்ட இயக்குநர் ஆர்.ஜெயஸ்ரீ, ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் பாலாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

EVA STALIN IAS AC



# பெண்ணுரிமை பேசிய அரசியலர்

**ஜூலை 22 டாக்டர் முத்துலட்சுமி நினைவு நாள்**

**வெற்றிச்செல்வன்**
vetrichelvan.a.kc@gmail.com

**பெண்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு வந்ததற்கான நெடிய வரலாறு, தமிழ்நாட்டுக்கு மட்டுமே சொந்தமானது. தமிழ்நாட்டு அரசியல் வெளியில் பெண்கள் செயல்பட்ட அளவுக்கு வேறு எந்த மாநிலத்திலும் செயல்படவில்லை. அரசனான அதியமானுக்கே அறிவுரை சொன்ன ஔவை வாழ்ந்த மண் அல்லவா இது!**

பெண் விடுதலை வரலாற்றில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி என்கிற ஆளுமையின் பங்களிப்பு, பெண்ணுலகம் என்றும் நினைவில் வைத்துக் கொண்டாடுவதற்கு உரியது. தமிழகச் சட்டமன்றத்தில் இவர் ஆற்றிய அரும்பணிகள் போற்றிப் பாராட்டப்பட வேண்டியவை. தன்னுடைய அனுபவங்களை 'My Experience as a Legislator' நூலில் பதிவு செய்திருக்கிறார் முத்துலட்சுமி. அப்போதைய சென்னை மாகாண சட்டமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட முத்துலட்சுமி, டிசம்பர் 1926 முதல் ஜூன் 1930 வரை இந்தப் பணியில் ஈடுபட்டார். பின்னர் சட்டமன்றத்தின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவரது பெயரை முன்மொழிந்தவர் இன்றைய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனின் தாத்தாவும், நீதிக்கட்சியைச் சேர்ந்தவருமான பி. டி. ராஜன்.

டாக்டர் முத்துலட்சுமி துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, நீதிக்கட்சியைச் சேர்ந்த எம். கிருஷ்ணன் பேசியவை:

"பெண்களுக்குச் சிறப்புரிமை வழங்குவதில் மெட்ராஸ் மாகாண சட்டமன்றம் எப்போதும் மற்ற மாகாணங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்க முதன் முதலாகத் தீர்மானம் கொண்டுவந்த சட்டமன்றம் இதுதான். பெண்கள் சட்டமன்றத் தேர்தலில் நிற்பதற்கும் நியமிக்கப்படுவதற்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டதும் இங்குதான்".

இதிலிருந்து பெண்ணுரிமை பேணுவதில் தமிழ்நாடு முன்னோடியாக இருந்ததை அறியலாம். சட்டமன்றத்தில் நடந்த மானியக் கோரிக்கை விவாதங்களின்போதும், பொதுவான விவாதங்களின்போதும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுத்தவர் முத்துலட்சுமி. அப்போதைய சென்னை மாகாணத்தில் குழந்தை இறப்பு விகிதம் 1000-க்கு 300 ஆக இருந்தது. இதைச் சுட்டிக்காட்டி, குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும் என்று சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். உயர்நிலைப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, அதுவும் ஆண் மாணவர்களுக்கு மட்டுமே மருத்துவப் பரிசோதனை நடைமுறையில் இருந்தது. இப்பரிசோதனை தொடக்கநிலைப் பள்ளிகளுக்கும், மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர் முத்துலட்சுமி. பெண்களில் மிகக் குறைவான சதவீதத்தினருக்கே உயர்கல்வி கிடைத்துவந்த நிலைமையைச் சுட்டிக்காட்டி, பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்றார்.

பால்வினை நோயால் பாதிக்கப்படும் பெண்களுக்குச் சிகிச்சை அளிக்க, பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது அவருடைய முக்கியமான கோரிக்கை. இளம் வயதில் திருமணம் செய்துவைப்பதன் தீமைகளை விவரித்து காந்திக்குக் கடிதம் எழுதி, அவரது ஆதரவையும் கடிதத்தின்வழி பெற்றார். சட்டமன்றத்திலும் இது குறித்துப் பேசினார். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும், பெண் காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது போன்ற அவரது முன்னெடுப்புகள் மிகவும் முன்னோடியானவை.

டாக்டர் முத்துலட்சுமியின் முக்கியமான பங்களிப்பாக இன்றளவும் கருதப்படுவது, தேவதாசி முறையை ஒழிப்பதற்கு சட்டமன்றத்தில் அவர் கொண்டுவந்த சட்ட முன்வரைவே. கோயில்களுக்குப் பெண்களைப் பொட்டுக்கட்டி நேர்ந்துவிடும் சமூகக் கொடுமையை எதிர்த்துச் சட்டமன்றத்தில் விரிவான கொள்கைப் போரை நடத்தியவர் முத்துலட்சுமி. இச்சட்டத்திற்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்து, 30.10.1927 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் பெரியார் எழுதினார். மேலும், சட்ட வரைவுக்கு முழுமையான ஆதரவு தெரிவித்து, அரசுக்குக் கடிதமும் எழுதினார். 1930இல் காந்தியின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தனது பதவியைத் துறந்தார் முத்துலட்சுமி.

இத்தகைய பெருமைமிகு வரலாறு கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் தற்போதைய சட்டமன்ற பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெறும் 5 சதவீதம் மட்டுமே என்பது சிந்தனைக்கு உரியது.

### முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கான

# மாதாந்திர ஓய்வூதியம் 1,200-ஆக உயர்வு

### ● முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் முடிவு

● **சென்னை**

முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான மாத ஓய்வூதியத் தொகையை ரூ.1,000-ல் இருந்து, ரூ.1,200-ஆக உயர்த்தி வழங்குவது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அமைச்சர் செந்தில்பாலாஜி கைது, உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத் துறை சோதனை, விசாரணை என்ற பரபரப்பான சூழ்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், அமைச்சர்கள், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா மற்றும் துறைச் செயலர்கள், உயரதிகாரிகள் பங்கேற்றனர். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை செயல்படுத்துவது, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு திட்ட மாதாந்திர ஓய்வூதியத் தொகையை உயர்த்துவது உள்ளிட்டவை குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பின்னர், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகம் பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் மூலமாக ஏழைகளுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது. சமூகப் பாதுகாப்புத் திட்டம் மூலமாக வழங்கப்படும் முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட ஓய்வூதியங்கள் ரூ.1,000-ல் இருந்து, ரூ.1,200-ஆக உயர்த்தி வழங்க அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்திரா காந்தி தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், மாற்றுத் திறனாளிகள், கைம்பெண்கள், ஆதரவற்றோர், கணவரால் கைவிடப்பட்டோர், 50 வயதுக்கு மிகாமல் திருமணமாகாத ஏழைப் பெண்கள் மற்றும் இலங்கையில் இருந்து வந்தவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

1962-ல் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, மாதம் ரூ.20 வழங்கப்பட்டது. இது படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது மாதம் ரூ.1,000 வழங்கப்படுகிறது. இதில், மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் கடந்த ஜனவரி 1-ம் தேதி முதல் 1,500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவை தவிர, முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**ரூ.845.91 கோடி கூடுதல் செலவு**

அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் மூலமாக 30 லட்சத்து 55,857 பயனாளிகள் மாதாந்திர ஓய்வூதியம் பெற்று வருகிறார். இவர்களுக்கு உதவும் வகையில், ஓய்வூதியத்தை ரூ.1,000-ல் இருந்து ரூ.1,200-ஆக உயர்த்தி வழங்க அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.845.91 கோடி கூடுதல் செலவு ஏற்படும். மேலும், ஓய்வூதியம் கோரி விண்ணப்பித்துள்ளோர் 74 லட்சம் பேர் உள்ளனர். அவர்களில் தகுதியானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும், அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கைத்தறி, தொழிலாளர் நலத் துறையின் கீழ் உள்ள 18 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள், கட்டிடத் தொழிலாளர் வாரிய உறுப்பினர்களும், உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தால் பயனடைவர். புதிய ஓய்வூதியம் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து வழங்கப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்கு மொத்தம் 3 கட்டங்களாக 35,925 முகாம்கள் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற உள்ளன. இந்த திட்டத்தில் தகுதிவாய்ந்த ஒரு பயனாளிகூட விடுபட்டு விடக் கூடாது என்பதில் முதல்வர் உறுதியாக உள்ளார்.

மணிப்பூர் சம்பவம் உலக அளவில் கவனம் பெற்றுள்ளது. தமிழக முதல்வரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். திமுக எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கண்டனக் குரல் எழுப்பி வருகின்றனர். மணிப்பூர் சம்பவத்தில் அதிமுக இரட்டை வேடம் போடுகிறது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். நிதித் துறைச் செயலர் த.உதயசந்திரன் உடனிருந்தார்.

**12 ஆண்டுகளுக்கு பிறகு...**

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தனது ட்விட்டர் பதிவில், “12 ஆண்டுகளுக்குப் பிறகு முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான ஓய்வூதியத் தொகை ரூ.1,000-ல் இருந்து, ரூ.1,200-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது” என்று தெரிவித்துள்ளார்.




லெபனான் தடகள சாம்பியன்ஷிப் பெய்ரூட்டில் நடைபெற்றது. இதில் மகளிருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் அன்னு ராணி 55.32 மீட்டர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். ஆடவருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் கிஷோர் ஜென்னா 78.96 மீட்டர் தூரம் எறிந்து தங்கம் வென்றார். மற்றொரு இந்திய வீரரான ஷிவ்பால் சிங் 73.34 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.